# பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 60** **நாள்: 04.05.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் நம்ம சென்னை என்ற புதிய செயலி (Mobile App) மூலமாகவும் தற்போது இச்செயலியை பதிவிறக்கம் செய்து புகார்களை பதிவு செய்யலாம்.**

பொதுமக்கள் கருத்து தெரிவிக்கும் வண்ணம் நம்ம சென்னை என்ற புதிய செயலியை (Namma Chennai App) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களால் 23.01.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

பொதுமக்களின் குறைகளை எவ்வித காலதாமதமின்றி உடனடியாக நிவர்த்தி செய்ய, அதிகாரிகளுக்கு கைபேசி மூலமாக எளிய முறையில் குறைதீர்க்கும் செயலி **(Namma Chennai - App)** சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கைபேசி செயலி **(Namma Chennai App)** மூலமாக பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு, அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கை விவரங்களை மனுதாரருக்கு கைபேசி செயலி மூலமாகவே உடனுக்குடன் தெரிவிக்கும் வண்ணம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் குறைகள் எவ்வித காலதாமதமின்றி உடனடியாக நிறைவேற்றப்படுகிறது

நம்ம சென்னை செயலி மூலம் பெறப்படும் புகார்கள் அனைத்தும் துறை சார்ந்த அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று பொதுமக்களின் குறைகள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தற்போது நம்ம சென்னை செயலி மூலமாக பெறப்பட்ட மொத்த புகார்கள் 2977 பதிவு செய்யப்பட்டு, பெரும்பாலான புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இச்செயலியை 23970 கைபேசி பயன்பாட்டாளர்கள் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**